# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## 2025-2026 நிதியாண்டின் பொதுக்குழு

### *மற்றும் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா செயல் அறிக்கை*

***மீரா மஹால், வீரபாண்டி, கோயமுத்தூர்***

**2-8-2026 - *ஞாயிற்றுக்கிழமை - காலை* 9 *மணி முதல் மாலை* 5 *மணி வரை***

## செயல் அறிக்கையும் தீர்மானங்களும்

*சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் 50 அங்கத்தினர்களில் 36 பேர் நேரடியாக கலந்து கொண்டனர். இது தவிர பொதுக்குழுவுடன் இணைந்து நடத்திய சங்கத்தின் ஆண்டு விழாவினை ஒட்டி 175 க்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களும் விருந்தினர்களும் திரளாக கலந்து கொண்டனர்.*

*கூட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் திரு J சந்திரன் அவர்களும் ஊர் தலைவர் திரு K சந்திர கவுடர் அவர்களும் தலைமை தாங்கி வழி நடத்தினர். பொதுக்குழு கூட்டத்தின் விரிவான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*

*கூட்டத்தில் 2025-2026 ஆண்டிற்கான செயல் அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட கணக்கு விவரங்கள், நடைபெற்ற நிகழ்வுகள் ஆகியவை விவாதிக்கப்பட்டு ஒவ்வொன்றாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாக குழு உறுப்பினர்கள் சமர்ப்பித்த செயல் அறிக்கையின் சாராம்சங்களும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் வருமாறு:*

*"முக்கிமலைகாகி முக்கிமலையவக்க" என்ற சித்தாந்தத்துடன் 2-6-2024 அன்று 14 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல மன்றம், சங்க நிர்வாகிகள் பதவியேற்ற நாளான 11-8-2024 அன்று 36 ஆக உயர்ந்து, 2024 செப்டம்பர் கடைசிக்குள் 50 அங்கத்தினர்கள் என்ற இலக்கை எட்டியது. 2025-2026 ஆண்டில் இந்த 50 சொந்தங்களும் தொடர்ந்து சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பது சிறப்பு அம்சம்.*

*இது போன்று 2024-2025 வருடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழு உறுப்பினர்களும் தொடர்ந்து அந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதையும் நிர்வாக குழுவில் கடந்த 2025-2026 நிதியாண்டில் எந்த மாற்றமும் இல்லை என்பதும் பதிவு செய்யப்படுகிறது.*

***தீர்மானம் 1: 2024-2025 வருடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் தொடர்ந்து அந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். 2025-2026 நிதியாண்டில் எந்த மாற்றமும் இல்லை என்பதும் பதிவு செய்யப்படுகிறது.***

## *நிர்வாக குழு கூட்டங்கள் - J சந்திரன், சங்க தலைவர்*

*2025-2026 வருடம் சங்கத்தின் சார்பில் 20-4-2025, 18-5-2025, 15-6-2025, 13-7-2025, 23-7-2025, 10-8-2025, 14-9-2025, 14-10-2025, 23-11-2025, 27-12-2025, 28-1-2026, 15-2-2026 ஆகிய தினங்களில் மொத்தம் 12 நிர்வாக குழு கூட்டங்கள் நடைபெற்றன.*

*10-8-2025 நடந்த கூட்டமானது 2024-2025 நிதியாண்டின் பொதுக்குழு கூட்டமாகவும் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு  விழாவாகவும் நடத்தப்பட்டது.  15-2-2026 அன்று முக்கிமலை ஊரில் நிர்வாக குழு கூட்டத்துடன் அனைவரும் கலந்து கொண்ட பொதுக்குழு கூட்டமும் நடைபெற்றது.*

*எல்லா கூட்டங்களின் தீர்மானங்களும் அனைத்து அங்கத்தினர்களிடமும் வாட்ஸ் அப் மூலம் பகிரப்பட்டு வருவது சிறப்பம்சம் என்று சொல்ல வேண்டும்.  2025-2026 நிதி ஆண்டிலும், 2026-2027 நிதி ஆண்டில் இதுவரை நடந்த நிர்வாக குழு கூட்டங்களின் தீர்மானங்களும் அங்கத்தினர்களிடம் பகிரப்பட்டுள்ளது.*

*எனவே 2025-2026 நிதியாண்டு கூட்டங்களின் தீர்மானங்கள் மற்றும் 2026-2027 நிதியாண்டின் ஆண்டு விழா நடக்கும் 2-8-2026 வரை நடந்த நிர்வாக குழு கூட்டங்களின் தீர்மானங்களையும் இந்த பொதுக்குழு அங்கீகரிக்கிறது என்பதும் பாராட்டுதலுக்குரியது என்பதை பதிவு செய்கிறோம்.*

*இந்த கூட்டங்களை தாண்டி விழாக்களிலும் சொந்தங்களின் குடும்ப ஈமச்சடங்கு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பொழுது சங்க தொடர்பான செய்திகள் பரிமாறப்பட்டன.*

***தீர்மானம் 2: 2025-2026 நிதியாண்டு கூட்டங்களின் தீர்மானங்கள் மற்றும் 2026-2027 நிதியாண்டின் ஆண்டு விழா நடக்கும் 2-8-2026 வரை நடந்த நிர்வாக குழு கூட்டங்களின் தீர்மானங்களை இந்த பொதுக்குழு அங்கீகரிக்கிறது.***

## *சங்கத்தின் திட்டங்கள்*

*சங்கத்தின் பிரதான திட்டங்களான வரியில்லா இறுதியாத்திரை, மருத்துவ உதவி, கல்வி உதவி ஆகியவற்றின் விவரங்கள்  வருமாறு:*

### *வரியில்லா இறுதியாத்திரை: - R சுப்பிரமணி, செயலாளர்*

*சங்கத்தின் முதன்மை திட்டமான "வரியில்லா இறுதியாத்திரை" திட்டத்திற்கு ரூபாய் 15 லட்சம் நிதி திரட்டி அதனை ICICI வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக செலுத்தி இருக்கிறோம்.*

*இன்றைய அங்கத்தினர்களும், வருங்கால சந்ததியினரும் இந்த நிரந்தர வைப்பு நிதியின் மூலமாக பெறப்படும் வட்டியை கொண்டே இறுதியாத்திரை*

*செலவினங்களை மேற்கொள்ளலாம். இந்த திட்டம் ஆயிரம் காலத்து பயிராக இருக்கப் போகின்றது என்பதை ஆணித்தரமாக சங்கம் நம்புகிறது.*

*நமது அங்கத்தினர் திரு K ராஜு கவுடர் அவர்கள் இறுதி யாத்திரைக்கு ஏற்பட்ட செலவான ரூபாய் 36,552 முழுவதுமாக சங்கம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

*முக்கிமலையில் இருந்து கேஸ் மயானத்தில் தகனம் செய்யப்பட்ட இரண்டாவது பூத உடல் என்பது நமது சங்க அங்கத்தினர் K ராஜு கவுடர் அவர்களது என்பது குறிப்பிடத்தக்கது.*

***தீர்மானம் 3:* வரியில்லா இறுதியாத்திரை திட்டம் தற்பொழுது நடைபெறுவது போல வரும் காலங்களிலும் தொடரும்.**

### மருத்துவ உதவி - R சிவக்குமார், இணைச்செயலாளர்

*அங்கத்தினர்களின் குடும்ப உறுப்பினர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும்பொழுது முடிந்த உதவி செய்ய வேண்டும் என்ற திட்டத்தின் மூலமாக, 2025-2026 நிதியாண்டில் 7 பேருக்கு ரூபாய் 5,000 உதவித்தொகை கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்க மற்றும் ஒரு அம்சம். உதவி பெற்றோர் விபரம் வருமாறு:*

*1. 25-6-2025 - J B சுரேஷ் ( தாயார் ராஜியம்மாள்) - ரூபாய் 5,000*

*2. 27-7-2025 - R சிவகுமார் (தந்தையார் K ராஜு கவுடர்) - ரூபாய் 5,000*

*3. 27-7-2025 - R சுனில் குமார் ( தாயார் மேரியம்மாள்) - ரூபாய் 5,000*

*4. 17-9-2025 - J. சந்திரன் (மனைவி பார்வதி) - ரூபாய் 5,000*

*5. 19-9-2025 - B. ஆனந்தகுமார் ( தாயார் ராஜம்மாள்) - ரூபாய் 5,000*

*6. 24-11-2025 - B. ஜோகி - ரூபாய் 5,000*

*7. 8-3-2026 - திருமதி பார்வதி ராமன் (N சிவகுமார் என்ற பெயரில்) - ரூபாய் 5,000*

*திருமதி ராஜியம்மாள், திருமதி மேரியம்மாள், திரு K ராஜு கவுடர் ஆகியோர் உதவி பெற்ற விபரங்கள் முதல் ஆண்டு செயல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக மொத்தம் சங்கம் ஆரம்பித்த நாள் முதல் 31 மார்ச் 2026 வரை மொத்தம் 14 அங்கத்தினர்கள் மருத்துவ உதவி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*வரும் காலங்களிலும் இதுவரை மருத்துவ உதவி பெறாத அங்கத்தினர்களின் குடும்பங்களில் மருத்துவ சிகிச்சைக்காக உதவி தேவைப்படும் பொழுது, சங்கம் அவர்களுக்கு ரூபாய் 5,000 உதவி அளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

***தீர்மானம் 4:* இதுவரை மருத்துவ உதவி பெறாத அங்கத்தினர்களின் குடும்பங்களில் மருத்துவ சிகிச்சைக்காக உதவி தேவைப்படும் பொழுது, சங்கம் அவர்களுக்கு ரூபாய் 5,000 உதவி அளிக்கும்.**

#### கல்வி உதவி

*குழந்தைகள் நன்கு கல்வி பெறவேண்டும் என்பதற்காக கல்வி ஊக்கத்தொகை திட்டம் நிறுவி அதன் மூலம் சங்கம் ஆரம்பித்த முதல் ஆண்டே செல்வி R*

*ரினிதாவிற்கு 5,000 ரூபாய் உதவித்தொகை அளித்தது. 2025-2026 நிதியாண்டில் செல்வி S.தனிஷா கல்வி உதவிக்காக சங்கத்தின் மூலம் ரூபாய் 5,000 வழங்கப்பட்டது.*

*சங்கத்தின் இந்த உதவியைத் தவிர நல் உள்ளம் கொண்ட நமது சங்க உறுப்பினர்கள் சங்க அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு தனிப்பட்ட முறையில் அவர்களால் முடிந்த அளவு கல்விக்காக உதவி வருகின்றார்கள்.*

***தீர்மானம் 5: கல்வி உதவித் தொகை 10 மற்றும் 12 வகுப்பு முடிக்கும் குழந்தைகளுக்கு மட்டும் பொருந்தும். குறிப்பிட்ட வருடத்தில் இந்த வகுப்புகளில் படிக்கும் அங்கத்தினர்களின் குழந்தைகள் இல்லாத பொழுது, அந்த வருடம் உதவித்தொகை அளிக்க தேவையில்லை.***

## *ஊர் பெண்கள், மருமகன்கள் மரண நிகழ்வுகள்: - J கணேஷ், இணைப் பொருளாளர்*

*நம் ஊர் பெண்கள் மற்றும் மருமகன்கள் குடும்பங்களில் மரண நிகழ்வுகள் ஏற்படும் போது சங்கத்தில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்ற பரிந்துரையை மேற்கொண்டு கடந்த 2025-2026 வருடம் 2 நிகழ்வுகளில் சங்க அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். அந்த விபரங்கள் வருமாறு:*

1. *ஒசஹட்டி திருமதி சரோஜியம்மாள் (முக்கிமலை திரு L நஞ்சன் அவர்களின் சகோதரி) - 4-5-2025 - ஒசஹட்டியில் தகனம்.*
2. *திரு கிருஷ்ணன் - முள்ளிமலை (புரவலர் B ஜோகி, அங்கத்தினர் B பீமன் ஆகியோரின் சகோதரி மற்றும் செயலாளர் R சுப்பிரமணி, அங்கத்தினர் R ரமேஷ் ஆகியோரின் அத்தை திருமதி லட்சுமி அவர்களின் கணவர்) - 2-10-2025 - முள்ளிமலையில் தகனம்.*

***தீர்மானம் 6: ஊர் பெண்கள் மற்றும் மருமகன்கள் ஈமச்சடங்கு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் தற்போதைய நடைமுறை வரும் காலங்களிலும் தொடரும்.***

## *நமது சங்க உறுப்பினர் மரணம்*

*நமது சங்க உறுப்பினர் மற்றும் ஊர் பெரியவர் திரு K ராஜூ கௌடர் அவர்கள் 22-2-2026 அன்று கோவையில் இயற்கை எய்தினார். அவரது பூதவுடல் முக்கிமலைக்கு கொண்டுவரப்பட்டு நமது கேஸ் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. அவரது ஈமச்சடங்கிற்கு பெருவாரியான சங்க உறுப்பினர்கள் சென்று இறுதி யாத்திரையில் கலந்து கொண்டனர்.*

***தீர்மானம் 7: சங்கம் முன் நின்று நடத்தும் இறுதியாத்திரைகளில் சங்க அங்கத்தினர்கள் பெருவாரியாக கலந்து கொள்ள வேண்டும் என்பது பொதுக்குழுவின் விண்ணப்பம்***

## நமது ஊரில் நிகழ்ந்த பிற மரணங்கள் - *M R* சிவக்குமார், நிர்வாக குழு உறுப்பினர்

1. *திருமதி லட்சுமி அம்மாள் லக்ஷ்மண கவுடர் அவர்கள் - 26-10-2025 - முக்கிமலையில் தகனம்.*
2. *திருமதி மாதியம்மாள் K ராமா கவுடர் அவர்கள் - 4-3-2026 - முக்கிமலையில் தகனம்.*
3. *ஊரில் மூத்தவர் திரு சென்னா கவுடர் அவர்கள் - 6-3-2026 - முக்கிமலையில் தகனம்.*

*எல்லா மரண நிகழ்வுகளும் சங்க உறுப்பினர்களுக்கு வாட்ஸ் அப் மூலம் அந்த நிகழ்வு நடந்த அன்றே தெரிவிக்கப்பட்டது.*

***தீர்மானம் 8:* ஊரில் அங்கத்தினர் அல்லாதவர் நடத்தும் ஈமச்சடங்குகளில் கலந்து கொள்ளும் தற்போதைய நடைமுறை வரும் காலங்களிலும் தொடரும்.**

## மருத்துவமனைகளில் நலம் விசாரித்தல்: - *B* மோகன்ராஜ், நிர்வாக குழு உறுப்பினர்

*கடந்த வருடத்தில் முக்கிமலையில் வாழும் எந்த சொந்தமாக இருந்தாலும் கோயம்புத்தூரில் மருத்துவமனையில் இருக்கும் செய்தி, குறித்த நேரத்தில் கேட்டறியும் பொழுது, சங்க உறுப்பினர்கள் அநேக பேர் சென்று நலம் விசாரித்தனர்.*

***தீர்மானம் 9:* மருத்துவமனைக்குச் சென்று முக்கிமலை ஊர்வாசிகளை நலம் விசாரிக்கும் தற்போதைய நடைமுறை வரும் காலங்களிலும் தொடரும்.**

## சங்க உறுப்பினர்களின் இல்ல விழா

*சங்க உறுப்பினர்களின் இல்ல விழாக்களில் அங்கத்தினர்கள் கலந்து கொள்வதும் நடைமுறைக்கு வந்திருப்பது இன்னும் ஒரு சிறப்பு. அதன்படி உப தலைவர் திரு K அரசு அவர்களின் புது மனை புகுவிழா மற்றும் திரு R ரமேஷ் அவர்கள் புதல்வர் நடத்திய ஐயப்ப பூஜை விழாவில் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.*

***தீர்மானம் 10:* சங்க உறுப்பினர்கள் இல்லங்களில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொள்ளும் தற்போதைய நடைமுறை வரும் காலங்களிலும் தொடரும்.**

## கோவில் பூஜை

*முக்கிமலை கோவிலில் நடக்கும் பூஜைகளுக்கு வாரம் ரூபாய் 500 செலவு ஆகலாம் என்றும் எந்தெந்த குடும்பங்கள் எப்பொழுது பூஜை ஏற்பாடுகளுக்கான செலவினங்களை ஏற்க வேண்டும் என்று பட்டியலிட்டு, இந்தப் பட்டியலின்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றன.*

*தீர்மானம் 11:* **நமது ஊர் கோயில் பூஜைகளுக்கு அங்கத்தினர்கள் குடும்பங்கள் சார்பாக பூஜைக்கு செய்யும்  பங்களிப்பில் பின்பற்றப்படும் தற்போதைய நடைமுறை வரும் காலங்களிலும் தொடரும்.**

## ஆன்மீக விழாக்கள் - *K* ராமச்சந்திரன், நிர்வாக குழு உறுப்பினர்

*2025-2026 நிதி ஆண்டில் மூன்று ஆன்மீக விழாக்கள் நடந்தன. இவற்றில் பெருவாரியான அங்கத்தினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

1. *13-7-2025 அன்று சங்க உறுப்பினர்களும் மற்றும் சொந்தங்களும் ஆக சுமார் 100 பேர் அவிநாசியில் அமைந்திருக்கின்ற அவினாசிலிங்கேஸ்வரர் சிவத்தலத்திற்கு சென்று நமது ஊர் சார்பாக நேர்த்திக்கடன் செலுத்தினர்.*

2. *23-7-2025 அன்று கோவையில் இருந்து 21 சொந்தங்கள் நமது ஊரில் தெவ்வ பண்டிகைக்கு சென்று ஊர் சொந்தங்களுடன் சேர்ந்து காணிக்கை செலுத்தி பின்பு அன்னதானத்தில் கலந்து கொண்டனர்.*

3. *15-2-2026 இல் நமது ஊர் சிவன் கோவிலில் இரவு முழுவதும் மகா சிவராத்திரி பூஜைகள் நடைபெற்று அதில் 50க்கும் மேற்பட்ட சொந்தங்கள் கண் விழித்து பக்தி வழிபாடு செய்தது குறிப்பிடத்தக்கது. 2025 பிப்ரவரி மாதம் நடந்த முதல் மகா சிவராத்திரி விழாவை தொடர்ந்து 2026 ஆண்டிலும் மகா சிவராத்திரி விழா சிறப்பாக அமைந்தது.*

*தீர்மானம் 12:* **ஆன்மீக யாத்திரை தேவைக்கேற்ப நிர்வாக குழு மூலம் திட்டமிடப்பட்டு வரும் காலங்களில் யாத்திரைகள் மேற்கொள்ளப்படும்.**

## நிதிநிலை - *Dr N* சுகுமாரன், நிதி குழு தலைவர் மற்றும் *B* சகாதேவன் பொருளாளர்

*கடந்த 2025-2026 நிதியாண்டில் நமது வங்கி கணக்குகளில் நடைபெற்ற மொத்த பரிவர்த்தனை ரூபாய் 18,75,288. சங்கத்தின் வரவு செலவு கணக்குகள் வாட்ஸ் அப் மூலம் 15-4-2026 அன்று அனைத்து  அங்கத்தினர்களுக்கும் பகிரப்பட்டது.  மகா சிவராத்திரி, அவிநாசி கோயில் திருவிழா, அங்கத்தினர் இறுதியாத்திரை, பெண்கள் குடும்பத்தாரின் இறுதியாத்திரை, ஊருக்கு நமது பங்காக அளித்த தொகை ஆகிய அத்தனையும் சேர்த்து மொத்த செலவு ரூபாய் 3,40,272.*

*சென்ற ஆண்டு அத்தனை செலவினங்கள் மற்றும் 15 லட்சம் வைப்பு நிதியில் செலுத்தியதையும் தாண்டி நமது இறுதி உபரித்தொகை ரூபாய் 35,016. இதைத் தவிர 2024-2025 ஆம் நிதி ஆண்டில் செலுத்திய ஒரு லட்சம் வைப்பு தொகை 2026 ஏப்ரல் 17ஆம் தேதி முதிர்ச்சி அடைந்தது.*

*சங்கத்தின் வரவு செலவு கணக்கு  பொதுக்குழுவிலும் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்து அங்கத்தினர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.*

*2025-2026 கணக்குகளில் படி சங்கத்தின் நிதி நிலைமை சீராகவும் ஏறுமுகமாகவும் இருப்பதற்கு உதவியாக இருக்கும் நமது சொந்தங்கள் அனைவருக்கும் நன்றி!*

*சங்கத்தின் வரவு செலவு கணக்கு மற்றும் நிதி நிலை அறிக்கை "H M P S & அசோசியேட்ஸ் தணிக்கை நிறுவனம்" மூலமாக தணிக்கை செய்யப்பட்டு உள்ளது.*

*மேலும் சங்க கணக்குகள் சரியாக இருப்பதற்கு சங்க பொருளாளருக்கு உதவி செய்து வரும் திரு N வேல்முருகன் அவர்களுக்கும் சங்கம் தனது நன்றியை தெரிவிக்கின்றது.*

***2025-26 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு சங்க பொருளாளரால் அனைவரின் முன்னிலையிலும் படித்து காண்பிக்கப்பட்டது.***

***தீர்மானம் 13:* *பொதுக்குழு உறுப்பினர்களால் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான நிதி அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.***

***தீர்மானம் 14:* *"H M P S & அசோசியேட்ஸ் தணிக்கை நிறுவனம்" சங்கத்தின் கணக்குகளை தணிக்கை செய்து, வருமானத்துறை பரிவர்த்தனைகளை மேற்கொண்டு, அரசாங்கத்திற்கு சங்கத்தின் ஆவணங்களை சமர்ப்பிக்க நிர்வாக பொதுக்குழு 2025-2026 மற்றும் 2026-2027 நிதியாண்டுக்கு நியமிக்கிறது.***

*சங்கம் ஆரம்பித்த 2024 ஆண்டு முதல் ஒற்றுமையுடன் சங்க செயல்பாடுகளுக்கு பங்களித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் பொதுக்குழு சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களையும் தாண்டி சங்க வளர்ச்சிக்காக நமது முக்கிமலை ஊர் சகோதரிகளும் மருமகன்களும் ஆத்மார்த்தமாக பங்களிப்பதை மிகவும் பெருமையாக கருதுகிறோம்.*

*வரும் காலங்களில் நமது சங்க உறுப்பினர்கள் மற்றும் நமது ஊர் பெண்கள், அவர்கள் குடும்பங்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளில் உடன் இருந்து நாம் பணியாற்றுவோம் என்று பொதுக்குழுவில் அனைத்து அங்கத்தினர்களும் சங்கல்பம் எடுத்துக் கொண்டனர். சங்கம் மேன்மேலும் வளர பொதுக்குழுவில் கலந்து கொண்ட அத்தனை அங்கத்தினர்களும் தங்களது ஏகோபித்த வாழ்த்துக்களை பதிவிட்டனர்.*

*வளர்க சங்கம்!!*

***ஓம் நமசிவாய!!!***

***2-8-2026***